தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

24.11.2012 A.M

**திருமங்கலம் அருகே வேளாண் வங்கியில் ரூ. 40 லட்ச நகைகள் கையாடல்: விசாரணை**

திருமங்கலம் அருகே உள்ளது சிவரக்கோட்டை தொடக்கக் கூட்டுறவு வேளாண் வங்கி. இங்கே செயலராக உள்ளார் சீதாலட்சுமி. இங்கே துணைச் செயலராக பிச்சை என்பவர் பணி செய்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக இந்த வங்கி மூடப்பட்டிருந்ததாம். இந்த வங்கியில் ஏராளமானோர் நகை மற்றும் உடைமைகளை அடமானம் வைத்துள்ளனர். வங்கி மூடப்பட்டிருந்த நிலையில், நகை மற்றும் பண வரவு-செலவு விவசாயிகள் இது குறித்து போலீஸாரிடம் புகார் அளித்தனர்.

வங்கியின் பூட்டை உடைத்து என்ன என்று பார்க்க வேண்டும் என்று கோரி, அதற்கு அனுமதி கோரினர். இந்நிலையில், திடீரென இன்று சீதாலட்சுமி மட்டும் வங்கிக்கு வந்துள்ளார். அப்போது அவரிடம் சாவி பெற்று வங்கிக்கு உள்ளே சென்று சோதனையிட்ட போது, ரூ.40 லட்சம் மதிப்புள்ள நகைகள் காணவில்லை என்று தெரியவந்தது. இதை அடுத்து, சீதாலட்சுமி மற்றும் பிச்சை உள்ளிட்ட 5 பேரிடம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**வத்திராயிருப்பில் 104 மி.மீ. மழை: பிளவக்கல் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் சனிக்கிழமை அதிகாலை பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதிகபட்சமாக வத்திராயிருப்பில் 104 மி.மீ. மழை பெய்துள்ளது.

இப் பகுதியில் பருவமழை பொய்த்துவிட்ட நிலையில் குடிநீர் பிரச்னை ஏற்பட்டுள்ளது. மேலும் விவசாயிகளும் பருவமழையை நம்பி இருந்து ஏமாற்றம் அடைந்துவிட்டனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை பின் இரவில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் பலத்த மழை பெய்தது. காலை 8.30 மணி நிலவரப்படி ஸ்ரீவில்லிபுத்தூரில் 34 மி.மீ., பிளவக்கல் அணையில் 52 மி.மீ., கோவிலார் அணையில் 54 மி.மீ., வத்திராயிருப்பில் 104 மி.மீ. மழை பெய்துள்ளது.

பிளவக்கல் அணைக்கு நீர் வரத்து இல்லாமல் இருந்தது. தற்போது பெய்த மழையை அடுத்து அணைக்கு வினாடிக்கு 27.27 கனஅடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது.

அணையில் மொத்த கொள்ளளவு 192 மில்லியன் கன அடி. இதில் தற்போது 102.58 கன அடி தண்ணீர் உள்ளது. மொத்த ஆழம் 47.5 அடி. தற்போது 36.26 அடி தண்ணீர் உள்ளது.

இந்த மழையால் ஸ்ரீவில்லிபுத்தூர், மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள செண்பகத்தோப்பு-அத்தித்துண்டு கண்மாய்க்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் வாழைக்குளத்தில் இருந்து அணைத்தலை ஓடைக்கு தண்ணீர் சென்று கொண்டுள்ளது. தொடர்ந்து சில நாட்கள் மழை பெய்தால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து குடிநீர் பிரச்னை தீரும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

மழையின்றி திருவாடானை பகுதியில் நெற்பயிர்கள் கருகும் அபாயம்

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகா, ஆர்.எஸ். மங்கலம் பகுதியில் 42 ஆயிரம் ஹெக்டேர் நிலப் பரப்பளவில் போதிய மழையின்றி பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திருவாடானை தாலுகா, தமிழகத்தின் இரண்டாவது நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் பகுதியாகும்.

தமிழகத்தின் 2-வது பெரிய கண்மாய் ஆர்.எஸ். மங்கலத்தில் உள்ளது.

இதன் அருகே உள்ள ஆனந்தூர்,வண்டல், வரவணி செங்குடி,சனவேலி,ஏ.ஆர். மங்கலம் உள்ளிட்ட ஊர்களில் சுமார் 200 சிறு கண்மாய்களும் உள்ளன.

இப்பகுதியில் சுமார் 42 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பளவில் நெல் விவசாயம் நடைபெறுகிறது.

கடந்த மாதம் பெய்த மழையால் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டு, தற்போது பயிர்கள் நன்கு வளர்ந்துள்ள நிலையில், போதிய மழை இல்லாததால் கண்மாய்கள் வறண்டு உள்ளன.

வயல்களில் இன்னும் சில தினங்களுக்கு மட்டுமே ஈரப்பதம் இருக்கும் நிலையில், மழை பெய்தால்

மட்டுமே ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிர்களைக் காப்பாற்ற முடியும் என்பதால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

## விவசாய நில ஒதுக்கீடு: மாநிலங்களவையில் வலியுறுத்தல்

விவசாய நிலத்தை வேறு பயன்பாட்டுக்கு ஒதுக்குவதை தடுக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் தெலுங்கு தேசம் எம்.பி. ஒய்.எஸ்.செய்த்ரி வலியுத்தினார்.

மாநிலங்களவையில், வெள்ளிக்கிழமை இந்த விவகாரத்தை எழுப்பி,தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர் ஒய்.எஸ்.செய்த்ரி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசுகையில்,"" விவசாய நிலங்கள் விவசாயப் பயன்பாட்டுத் தவிர,வேறு நோக்கத்துக்கு பயன்படுத்துவதை தடுக்க வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார்.

மற்றொரு நில விவகாரம் தொடர்பாக, குமார் தீபக் (அசாம் கண பரிஷத்) குறிப்பிடுகையில், ""அசாம் மாநில பூர்வீக மக்களின் நலன்களை பாதுகாக்க, ஒரு விரிவான நிலக்கொள்கையை உருவாக்க வேண்டும்," என வலியுறுத்தினார்.

விஜய் தார்தா (காங்கிரஸ் கட்சி) பேசுகையில், ""கல்வி,சுகாதாரம், எரிசக்தி திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்," என்றார்.

## கடைமடை பகுதிகளுக்கு கூடுதல் நீர் திறக்கக் கோரிக்கை

பெரியாறு-வைகை கடைமடை பாசனப் பகுதிகளுக்கு கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும் என மேலூர் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரியாறு அணையிலிருந்து மேலூர் பகுதி விவசாயத்துக்குப் பிரதானக் கால்வாயில் நவ.9-ம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. விவசாயிகள் ஏற்கெனவே நாற்றங்கால் தயாரித்து வைத்திருந்ததால் நடவுப்பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

தற்போது புலிப்பட்டி மதகுக்குப் போதிய அளவு நீர்வரத்து இல்லாததால், கால்வாய்களில் குறைந்த அளவே தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால், வெள்ளலூர், தனியாமங்கலம், கொட்டகுடி, திருவாதவூர் உள்ளிட்ட கடைமடைப் பகுதிகளுக்குப் போதிய அளவு தண்ணீர் வரவில்லை. சாகுபடிப் பகுதியில் மழையில்லை.

எனவே, நடவுப்பணிக்கு கூடுதல் நீரை கால்வாய்களில் திறந்துவிட வேண்டும் என விவசாயிகள் சங்கத் தலைவர் சின்னடைக்கன் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளை பொருள்களை இலவசமாக இருப்பு வைக்க வசதி: ஆட்சியர்

விளைபொருள்களை விவசாயிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் குறிப்பிட்ட நாள் வரை இலவசமாக இருப்பு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக திண்டுக்கல் மாவட்ட

ஆட்சியர் ந.வெங்கடாசலம் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியதாவது:

மாவட்டம் முழுவதும் தீவிர நெல் சாகுபடி முறை குறித்த செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டு வருகிறது. தீவிர நெல் சாகுபடி முறையில் ஹெக்டேருக்கு ரூ.3,000 மானியமாக வழங்கப்படுகிறது. இந்த சாகுபடி முறையினால் ஏக்கருக்கு அரை டன் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையின் பயன்களை அறிந்து அதிக அளவில் நெல் பயிரிட்டு பயனடைய வேண்டும்.

மக்காச்சோளத்தில் இளம் பயிருக்கு நுண்ணூட்ட சத்து அளிப்பதன் மூலம் அதிக மகசூலை பெற முடியும். தேவையான நுண்ணூட்ட உரங்கள் வேளாண்மை மையங்களில் கிடைக்கும்.

துவரை நடவு முறை செயல் விளக்கங்களை அறிந்து விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும். நிலக்கடலை பயிரை மார்கழி பட்டத்தில் சாகுபடி செய்யலாம்.

இம் மாவட்டத்தில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் நெல் மற்றும் மக்காச்சோளம் போன்ற விளைப் பொருள்கள் விலை குறைவாக இருக்கும் சமயத்தில்

அவற்றை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெறலாம். பின்னர் விலை அதிகரிக்கும்போது விற்பனை செய்து பயனடையலாம். இவ்வாறு 120 நாள்கள் வரை இலவசமாக ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் இருப்பு வைத்துக் கொள்ளலாம். அந்த சமயத்தில் விளைபொருள்களின் மதிப்பில் 75 சதவிகிதம் அல்லது ஒரு நபருக்கு ரூ.2 லட்சம் வரை பொருளீட்டுக் கடனும் பெற்றுக் கொள்ளலாம். இந்த கடன் தொகைக்கு 5 சதவிகிதம் மட்டுமே வட்டி வசூலிக்கப்படும். விளை பொருள்களுக்கு இலவச காப்பீட்டு வசதியும் உண்டு. இதற்கு சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல் கொடுத்தால் போதுமானது என்றார் ஆட்சியர்.

முன்னதாக மாவட்ட வேளாண்மைத் துறையின் மூலம் வேளாண்மைத் துறையின் திட்டங்கள், மானியங்கள் பற்றிய விவரங்கள் அறிய அலுவலக தொலைபேசி எண்கள், நெல் மற்றும் சிறுதானியங்கள், பயறு வகை பயிர்கள், எண்ணெய் வித்து பயிர்கள், பருத்தி உள்ளிட்ட விதைப் பெருக்கத் திட்டம் குறித்த விவரங்கள் வேளாண்மை கழிவிலிருந்து மண்புழு உரம் தயாரித்தல் தொடர்பான பல்வேறு விவரங்கள் அடங்கிய திட்ட விளக்கக் கையேட்டினை ஆட்சியர் வெளியிட்டார்.

## ஒரு டன் கரும்புக்கு ரூ. 4 ஆயிரம் வழங்க வேண்டும்: விவசாயிகள் வலியுறுத்தல்

கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ. 4 ஆயிரமாக அரசு அறிவிக்க வேண்டும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் வெள்ளிக்கிழமை விவசாயிகள் வலியுறுத்தினர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஆட்சியர்

ஜி.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி, வேளாண் இணை இயக்குநர் முகமது கலிமுல்லா ஷெரீப், துணை இயக்குநர் சந்தானகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில், விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகள் குறித்துப் பேசினர். அதன் விவரம்:

பொங்கலூர் விற்பனைக்கூடத்தில் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. இங்கு வாரத்திற்கு 4 நாட்கள் கொப்பரை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சொட்டுநீர்ப் பாசனத்துக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 5 கோடி மானியத்தில் இதுவரை ரூ. 2 கோடி மட்டுமே பயன்படுத்தப்பட்டிருப்பதாக வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது. இதில் மானியம் பெற, இப்போது கடுமையான விதிகள் உள்ளன. இதைத் தளர்த்த வேண்டும். விவசாயிகள் வாங்கிய கடனுக்காக, ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவதை வங்கிகள் கைவிட வேண்டும்.

கரும்பு கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ. 2,350 ஆக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை மட்டுமே சிறிதளவு குறைக்க முடியும். கரும்பு சாகுபடிச் செலவு, வெட்டுக்கூலி ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு டன்னுக்கு ரூ. 4,000 ஆக அரசு அறிவிக்க வேண்டும்.

அமராவதி அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத நிலையில், பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு 20 நாள் ஆன நிலையிலும் விவசாயிகள் நெல் சாகுபடி பணிகளைத் தொடங்க தயக்கம் காட்டி வருகின்றனர். பொதுப்பணித் துறை அதிகாரிகள் தண்ணீர் இருப்பை ஆய்வு செய்து, புஞ்சைப் பாசனத்திற்காவது தடையில்லாமல் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கடும் மின்வெட்டு உள்ள நிலையில் மாற்று மின்சக்தியான சூரிய ஒளி மின்விளக்குப் பயன்பாடு குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

இதில் ஆட்சியர் கோவிந்தராஜ் பேசியது:

விவசாயிகள் வாங்கிய கடனுக்காக ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவதை வங்கிகள் முடிந்தவரை தவிர்க்க வேண்டும். சம்பந்தப்பட்ட விவசாயியை அழைத்துப் பேசி கடனைத் திரும்பப் பெறும் முயற்சியில் வங்கிகள் ஈடுபட வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, அடுத்த கூட்டத்திற்கு முன்னதாக சம்பந்தப்பட்ட விவசாயிக்கு அதிகாரிகள் பதில் அளிக்க வேண்டும் என்றார்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் **56.57** அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 56.57 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,841 அடி கன அடி

நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 700 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 6.12 டி.எம்.சி.

## "10 ஆயிரம் பேருக்கு இதுவரை விலையில்லா பசுக்கள் , ஆடுகள் '

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டங்களின் கீழ் விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தில் இதுவரை 10,032 பயனாளிகள் பயனடைந்துள்ளனர் என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் புதன்கிழமை நடைபெற்ற இந்தத் திட்டத்துக்கான பயனாளிகள் தேர்வுக் குழுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் தமிழக முதல்வரின் சிறப்புத் திட்டங்களின் கீழ் விலையில்லா கறவைப் பசுக்கள் 18 ஊராட்சிகளைச் சேர்ந்த 900 பயனாளிகளுக்கு ரூ. 3.06 கோடி மதிப்பிலும், விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள் 184 ஊராட்சிகளைச் சேர்ந்த 9,132 பயனாளிகளுக்கு ரூ. 11.46 கோடி மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளது.

நிகழாண்டில் திருவிடைமருதூர், திருப்பனந்தாள், பாபநாசம், அம்மாப்பேட்டை, பட்டுக்கோட்டை, மதுக்கூர் ஆகிய ஒன்றியங்களைச் சேர்ந்த 13 கிராம ஊராட்சிகளில் 1,275 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்படவுள்ளன. மேலும், பூதலூர், திருப்பனந்தாள், அம்மாப்பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 5 கிராம ஊராட்சிகளில் 250 பயனாளிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்படவுள்ளன. எனவே, தேர்வுக் குழுவினர் தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்ய வேண்டும் என்றார் பாஸ்கரன்.

கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சையது சமீம், ஊராட்சிகள் உதவி இயக்குநர் சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பூச்சி மருந்து தெளித்த விவசாயி சாவு

தஞ்சாவூர் அருகே வயலுக்குப் பூச்சி மருந்து தெளித்தபோது மயக்கமடைந்த தொழிலாளி புதன்கிழமை உயிரிழந்தார்.

தஞ்சாவூர் அருகே காந்தாவனம் கிராமத்தைச் சேர்ந்தவர் எஸ். ஞானசேகரன் (45). விவசாயி. இவர் செவ்வாய்க்கிழமை அப்பகுதியில் உள்ள வயலுக்கு தெளிப்பான் மூலம் பூச்சி மருந்து தெளித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, மயக்கமடைந்த அவர் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு புதன்கிழமை உயிரிழந்தார்.

இதுகுறித்து மெலட்டூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர்.

## விதைக் கரும்புக்குப் பிடித்தம்: பணத்தைத் திரும்ப வழங்க உத்தரவு

கரும்பு விவசாயிகளிடம் இலவசம் என அறிவித்துவிட்டு பின்னர் விதைக் கரும்புக்காகப் பிடித்தம் செய்த தொகையை உடனடியாகத் திரும்ப வழங்க வேண்டுமென தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்துக்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், கரும்பு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் அமிர்தஜோதி முன்னிலை வகித்தார்.

தமிழ்நாடு விவசாய சங்க மாவட்டச் செயலர் கே.பி. பெருமாள் பேசுகையில், சில தனியார் சர்க்கரை ஆலை நிறுவனத்தினர் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளை அணுகி விதைக் கரும்பு மற்றும் மருந்து இலவசமாகத் தருவதாகக் கூறி கரும்பு பயிரிடத் தூண்டியுள்ளனர். ஆனால், பயிர்களை அறுவடை செய்த பிறகு கரும்பு பயிரிட்ட விவசாயிகளை ஆலை நிர்வாகத்தினர் வேதனைப்பட வைத்துள்ளனர். நன்கு விளைந்த கரும்புகளை உரிய காலத்தில் வெட்ட அனுமதிக்காமல், தாமதமாக வெட்டுவதால் எடை குறைகிறது. உரிய லாபம் கிடைக்காமல் போய் விடுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்திடம், ஏற்கெனவே முறையீடு செய்யப்பட்டது. மேலும், விதைக் கரும்பு இலவசமாக தரப்படும் என்று முதலில் கூறிவிட்டு இப்போது அதற்கு பணம் பெற்றுக் கொள்கின்றனர்.

அறுவடையான கரும்புக்குப் பணத்தை உடனடியாக வழங்காமல், ஆறு முதல் ஒன்பது மாதங்கள் வரை தாமதப்படுத்தித் தருகின்றனர். எனவே, விதைக் கரும்புக்கான பணத்தை உடனடியாகத் திருப்பித் தர ஆட்சியர் உத்தரவிட வேண்டும் என்றார்.

மாவட்ட ஆட்சியர் பதிலளிக்கையில், தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர், விதைக் கரும்புக்காகப் பிடித்தம் செய்த தொகையினை விவசாயிகளிடம் உடனடியாகத் திரும்ப வழங்க வேண்டும். அடுத்த மாதம் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்துக்குள் இந்தத் தொகையை வழங்காவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்தார்.

இக் கூட்டத்தில் வேளாண்மைத் துறை அதிகாரிகள், கரும்பு விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பருவமழை தாமதம்: கருகும் அபாயத்தில் மானாவாரி பயிர்கள்

வடகிழக்கு பருவமழை தென்மாவட்டப் பகுதிகளில் தாமதமாகி வருவதால், ஓட்டப்பிடாரம் வட்டாரத்தில் மானாவாரி பயிர்கள் கருகும் அபாய நிலையில் உள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், எட்டையபுரம், கோவில்பட்டி வட்டப் பகுதிகள் மானாவாரி விவசாயம் மிகுந்தவை.

ஆண்டுதோறும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவமழையை நம்பி

தான் இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும். இதற்காக கோடை உழவுப் பணியை முடித்து விவசாயிகள் நிலங்களைத் தயார் நிலையில் வைத்திருப்பர்.

வழக்கமாக செப்டம்பர் முதல் வாரத்தில் பருவ மழைக்கான அறிகுறி தோன்றியவுடன் விவசாயிகள் உழவுப் பணியைத் தொடங்கி விதைப்புப் பணியையும் முடித்துவிடுவது வழக்கம். கம்பு, சோளம், மக்காச்சோளம், பாசிப்பயறு, உளுந்து, எள் போன்ற பயிர்களே அதிகளவில் பயிரிடப் படுகின்றன.

பருவமழை காலமான அக்டோபர் மாதத்தில், பயிர்களுக்கு களை எடுத்தல், மருத்து அடித்தல் போன்ற பணிகளைச் செய்வர். அப்போது, ஊடு பயிராக மிளகாய், தக்காளி, வெங்காயம் பயிரிடுவர்.

பொங்கல் பண்டிகைக்கு முன்பு, மானாவாரியில் பயிர் செய்யப்பட்ட தானியம் மற்றும் சோளப்பயிர்களை விவசாயிகள் அறுவடை செய்து விடுவார்கள். பின்னர் ஊடு பயிர்களாகப் பயிரிடப்பட்டப் பயிர்களுக்கு வழக்கமான விவசாயப் பணிகளைப் பார்த்து மகசூல் பெறுவர்.

கடந்த சில ஆண்டுகளாக பருவமழையின் தாமதத்தால், பருவம் தவறி விதைப்புப் பணி நடைபெறுகிறது. இதன் எதிரொலியாக எதிர்பார்த்த மகசூல் பெற முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

இந்த ஆண்டில் பருவமழை முன்கூட்டியே பெய்துவிடும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் மானாவாரி விதைப்புப் பணியை செப்டம்பர் முதல் வாரத்திலேயே முடித்துவிட்டனர். ஆனால், பருவமழை பெய்வதில் காலம் தாழ்ந்ததாலும், வெயில் அதிகமாக அடித்ததாலும் பெரும்பாலான நிலங்களில் விதைகள் கருகிவிட்டன.

விதைப்புப் பணி முடிந்த 20 நாள்களுக்கு பின்பு பெய்த மழையாவது பலன் தரும் என எண்ணிய விவசாயிகள், மீண்டும் விதைப்புப் பணியை மேற்கொண்டனர். ஆனாலும், தொடர் மழையின்மையால் இப்போது கருகும் நிலையில் பயிர்கள் உள்ளன.

கூலி உயர்வு போன்ற பல பிரச்னைகளுக்கு மத்தியிலும், மழை மீது நம்பிக்கை வைத்து பயிர்களுக்கு இடையே உழவு, களைஎடுத்தல் பணிகளை விவசாயிகள் செய்து வருகின்றனர்.

பருவமழை பெய்தால் மட்டுமே பலன் கிடைக்கும்; இல்லையெனில் கடனில் சிக்கித் தவிக்கும் அவலநிலை ஏற்படும் என்ற அச்சத்தோடு இந்த ஆண்டு மானாவாரி விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர் விவசாயிகள்.

இன்றைய வேளாண் செய்திகள்

24.11.2012 A.M

## நடப்பு பருவத்தில் கோதுமை உற்பத்தி குறையும்



பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது மற்றும் இடு பொருட்களின் விலை உயர்வு போன்ற காரணங்களால், நடப்பு பருவத்தில், நாட்டின் கோதுமை உற்பத்தி, 9.10 கோடி டன்னாக குறையும் என, கோதுமை ஆராய்ச்சி மையம் மதிப்பிட்டுள்ளது.கடந்த வேளாண் பருவத்தில், 29.90 லட்சம் ஹெக்டேரில், கோதுமை சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருந்தது.கோதுமைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, 1,285 ரூபாயாக உள்ள நிலையில், நடப்பு பருவத்தில், கோதுமை சாகுபடி பரப்பளவு, 29.50 லட்சம் ஹெக்டேராக இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.உள்நாட்டில், நடப்பு பருவத்தில், யூரியா உள்ளிட்ட இடு பொருட்களின் விலையும் மிகவும் அதிகரித்துள்ளது. குறிப்பாக, 50 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் (டி.ஏ.பி.,) உர மூட்டையின் விலை, 1,200 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய பருவத்தில், 470 ரூபாய் என்ற அளவில் மிகவும் குறைந்து காணப்பட்டது. இதுவும், கோதுமைசாகுபடிபரப்பளவுகுறைவிற்கு காரணமாகும். தாமதமான மழைப் பொழிவால், நெல் சாகுபடியில் பின்னடைவு ஏற்பட்டது. இதனால், கோதுமை அதிக அளவில் விளையும், பஞ்சாப்,

ஹரியானா மற்றும் உத்தரபிரதேச மாநிலங்களில், இதன் சாகுபடியிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.இந்தியாவில், கடந்த 2009-10ம் பருவத்தில், 28.40 லட்சம் ஹெக்டேரில், கோதுமை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 8.40 கோடி டன் உற்பத்தி செய்யப்பட்டது.சென்ற 2011-12ம் பருவத்தில், 29.90 லட்சம் ஹெக்டேரில் கோதுமை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து, நாட்டின் கோதுமை உற்பத்தி, சாதனை அளவாக, 9.39 கோடி டன்னை எட்டியது.சென்ற பருவத்தில், சாதகமான பருவ நிலை காணப்பட்டதால், கோதுமை உற்பத்தித் திறனும், சிறப்பாக இருந்தது. இது, நடப்பு பருவத்தில் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இதற்கிடையே, டில்லியில், சென்ற ஜூலை மாதத்தில், வெளி சந்தையில், ஒரு குவிண்டால் கோதுமை விலை, 1,170 ரூபாயாக இருந்தது. இது, சென்ற 16ம் தேதி நிலவரப்படி, 1,527 ரூபாயாக உயர்ந்துள்ளது.நடப்பு நிதியாண்டில், இதுவரையிலுமாக, 30 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, முழு நிதியாண்டில், 55 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

## *உலக அளவில் காபி உற்பத்தி ; 10 சதவீதம் அதிகரிக்க வாய்ப்பு*



புதுடில்லி: நடப்பு 2012-13ம் பருவத்தில் ( அக்டோபர்-செப்டம்பர்), சர்வதேச அளவில், காபி உற்பத்தி, 10 சதவீதம் உயர்ந்து, 14.80 கோடி மூட்டைகளாக (ஒரு மூட்டை=60 கிலோ) அதிகரிக்கும் என, சர்வதேச காபி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.கடந்த 2011-12ம் பருவத்தில், உலகளவிலான காபி உற்பத்தி, 13.45 கோடி மூட்டைகளாக இருந்தன.

இது, இதற்கு முந்தைய பருவத்தை விட, 0.8 சதவீதம் மட்டுமே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.பிரேசில் நாட்டில், நடப்பு பருவத்தில், அராபிகா வகை காபி உற்பத்தி மிகவும் அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.சென்ற 2011-12ம் பருவத்தில், சர்வதேச காபி ஏற்றுமதி, 3 சதவீதம் வளர்ச்சி கண்டு, 10.47 கோடி மூட்டைகளிலிருந்து, 10.78 கோடி மூட்டைகளாக உயர்ந்து காணப்பட்டன.

காபி அதிகம் விளையும் முக்கிய நாடுகளில், இதன் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நடப்பாண்டிலும், இதன் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என, சர்வதேச காபி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

24.11.2012 A.M

## திருமங்கலம் அருகே விளை ?நிலங்களை சேதப்படுத்தும் ?காட்டுப்பன்றிகள் விவசாயிகள் வேதனை

திருமங்கலம், : திருமங்கலம் அருகே விளைநிலங்களை காட்டுப்பன்றிகள் சேதப்படுத்தி வருவதால் விவசாயம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். பன்றிகளை விரட்ட வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருமங்கலம் தாலுகாவிற்கு உட்பட்ட சாத்தங்குடி, புல்லமுத்தூர், பச்சகோபன்பட்டி, காண்டை, செங்கப்படை உள்ளிட்ட பகுதிகளில் சோளம், கடலை, கிழங்கு ரகங்கள், பயிறு உள்ளிட்டவைகளை மானாவாரி விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். மழை, கிணற்று பாசனத்தை நம்பி பயிரிட்டுள்ள பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளன. இந்நிலையில் இந்த பகுதிகளில் இரவில் சுற்றித்திரியும் காட்டுபன்றிகள் நன்கு விளைந்துள்ள நிலக்கடலை, கிழங்கு, பயிர்களை செடிகளுடன் நாசப்படுத்தி வருகின்றன.

மேற்கு தொடர்ச்சி மலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நிலவிய கடும் வறட்சியின் போது மலையிலிருந்து இடம் பெயர்ந்த காட்டுப்பன்றிகள் சேடப்பட்டி அருகே தங்களாசேரி, சென்னம்பட்டி, கொண்டுரெட்டியபட்டி உள்ளிட்ட பகுதிகளில் தஞ்சமடைந்தன. அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட காட்டுப்பன்றிகள் சாத்தங்குடி, புல்லமுத்தூர் பகுதிகளில் தற்போது புதர்மண்டி கிடக்கும் கண்மாய்களில் தங்கள் வாழ்விடங்களை மாற்றிக்கொண்டு இரவில் பயிர்களை சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

சாத்தங்குடி விவசாயி மாரிச்சாமி கூறுகையில், 'எங்கள் கிராமத்தில் கடந்த 3 ஆண்டுகளாக காட்டுப்பன்றிகளின் அட்டகாசம் தொடர்கிறது.

இரவில் தனி நபராக விளைநிலங்களை கண்காணிக்கச் செல்லும் எங்களை பன்றிகள் தாக்குகின்றன. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனது நிலத்தில் பயிரிடப்பட்ட ரூ50 ஆயிரம் மதிப்புள்ள கடலை பயிர் பன்றிகளால் வீணாகியுள்ளன.

இப்பகுதியில் லட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிலான விளைபொருட்களை பன்றிகள் சேதப்படுத்தியுள்ளன. பன்றிகள் அட்டகாசம் குறித்து வனத்துறை, மாவட்ட நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை. காட்டுப்பன்றிகளை விரட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க எடுக்கவேண்டும்' என்றார்.

## அளவீடுகுறையாமல் தண்ணீர் தர விவசாயிகள் சங்கம் கோரிக்கை

மேலூர், : பெரியாறு அனையில் உள்ள தண்ணீரை அளவீடு குறையாமல் மேலூர் பகுதி பாசனத்திற்கு தர வேண்டும் பெரியாறு, வைகை ஒரு போக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மேலூர் பகுதி விவசாயிகள் சங்க செயலர் சின்னடைக்கன் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள மனு: பெரியாறு அனையின் நீர்மட்டம் உயர்ந்து கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டவுடன் மேலூர் பகுதியில் விவசாய பணிகள் துவங் கின. பின்னர் பெரியாறு அனையின் நீர்மட்டம் குறைந்து, பருவமழை பொய்த்து போனது. அனைத்து பகுதிகளுக்கும் ஒரே நேரத்தில் தண்ணீர் திறந்ததால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் விவசாய வேலை கள் முடங்கி விட்டன.

மின்தடையால் கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்களுக்கு கிணற்று பாசனம் மூலமும் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இதனால் அவை மழை இல்லாமல் வாடுகின்றன. எனவே பெரியாறு அணையில் மீதமுள்ள நீரை மேலூர் பகுதிக்கு வழங்கினால், இதுவரை பயிரிட்டுள்ள பயிர்களையாவது காப்பாற்றலாம். எனவே மேலூர் பகு திக்கு உரிய நீரை அளவீடு குறையாமல் வழங்க வேண் டும். மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் முல்லை பெரியாறு பகுதி

விவசாயிகளுக்கு தமிழக அரசு தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கோரியுள்ளார்.

## யானைகளின் இடப்பெயர்ச்சிக்காக 30 ஏக்கர் பண்ணை வாங்க திட்டம்

கோவை, : கோவை மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் ஆனைகட்டியில் கடந்த 1982ம் ஆண்டில் தோட்டக்கலை பண்ணை துவக்கப்பட்டது. 30 ஏக்கரில் அமைந்த இந்த பண்ணையில் மா, பலா, சப்போட்டா, கொய்யா, மாதுளை, தக்காளி, நெல்லி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட வகையான நாற்று வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது.
மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள இந்த பண்ணைக்கு யானைகள் கூட்டமாக வந்து நாற்றுக்களை ருசித்தும், சேதப்படுத்தியும் வந்தன. யானைகளின் வருகையை தடுக்க மின்வேலி அமைக்கப்பட்டது. ஆனால் மின்வேலியையும் யானைகள் சாய்த்து பண்ணையில் வளர்க்கப்பட்ட நாற்றுக்களை, செ டிகளை அழித்து விட்டன. மேலும் 17 யானைகள் பண்ணையிலேயே தங்கி விட்டன. பல மாதங்களாக இவை காட்டிற்குள் செல்ல மறுத்து விட்டன. கடந்த 8 ஆண்டுகளில், யானைகளால் சுமார் 40 லட்ச ரூபாய் மதிப்பிலான நாற்றுக்கள் அழிந்து போ னது. யானைகளால் இழப்பு அதிகரித்து வருவதை தொடர்ந்து தோட்டக்கலைத்துறையினர் பண்ணையை தற்காலிகமாக மூடி விட்ட னர். மீண்டும் இந்த பண்ணையை திறக்க கூடது. திறந்தால் யானைகள் வந்து பயிர்களை நாசம் செய்து விடும். தோட்டக்கலைத்துறை பண் ணையை வேறு இடத்திற்கு மாற்றி விடலாம் என தோட்டக்கலைத்துறை ஆணையர் அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.
இந்நிலையில், மூடப்பட்ட தோட்டக்கலைத்துறை பண்ணையை தங்கள் வசம் ஒப்படைக்கவேண்டும் என வனத்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனைகட்டியில் இருமாநில எல்லையில், யானையின் முக்கிய வழிதடத்தில் (காரிடார்) இந்த பண்ணை அமைந்துள்ளது. இந்த வழியாக தான் கொ டுங்கரை பள்ளத்தில் இருந்து கேரள வனத்திற்கு யானகளின் இடப்பெயர்ச்சி நடக்கிறது. தோட்டக்கலை பண்ணை இருப்பதால் யானைகள் அருகேயுள்ள 20 கிராமங்களில் புகுந்து விடுகின்றன. பண்ணையை ஒப்படைத்தால் அங்கே யானைகளுக்கான தீவன தோட்டம் அமைத்து மூங்கில், பசும்புல், சோளம் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளனர்.
மாவட்ட வன அலுவலகம் இது தொடர்பாக தோட்டக்கலைத்துறை நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளது. ஆனால் பண்ணையை நிரந்தரமாக மூடிய பின்னரே வனத்துறை வசம் இடத்தை ஒப்படைக்கப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்தனர்.

## <u>மலைவாழ் மக்கள் பொருட்களை விற்க சந்தை சங்கிலி மையம் கோவையில் துவக்கம்</u>

கோவை, : மூலிகை மற்றும் வாசனை பயிர்களில் துல்லிய வேளாண் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி கோவை வேளா ண்மைப் பல்கலைக்கழகத்தில் துவங்கியது.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனை சம்மேளனம் (டிரைபெடு) சார்பில் " மூலிகை மற்றும் வாசனை பயிர்களில் துல்லிய வேளாண் தொழில்நுட்பம்" என்ற தலைப்பிலான சிறப்பு பயிற்சி முகாம் வேளாண்மைப் பல்கலைக்கழக அரங்கில் நேற்று முன்தினம் துவங்கியது. தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி மைய முதன்மையர் குமார் வரவேற்றார்.

பயிற்சியை துவக்கி வைத்தும் கருத்தரங்கு மலரை வெளியிட்டும் கோவை மாவட்ட வன அலுவலர் திருநாவுக்கரசு பேசுகையில்," கோவை மாவட்டத்தில் 690 எக்டர் பரப்பளவில் வனப்பரப்பு அமைந்துள்ளது. இங்குள்ள 37 கிராமங்களில் சுமார் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இதில் 15 கிராமங்களை தேர்வு செய்து, கிராமத்தினருக்கு 2 பேர் என மொத்தம் 30 பேருக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி குறித்து இம்மக்களுக்கு விழிப்புணர்வு மட்டும் அளிக்காமல், முழு பாதுகாவலான இருந்து வழிகாட்டினால் மட்டுமே மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும்," என்றார்.

பதிவாளர் சுப்பையன் பேசியதாவது: இந்தியாவில் சுமார் 8 ஆயிரம் மூலிகை செடிகள் மருத்துவ குணங்கள் நிறைந்து காணப்படுகிறது. இதன் மூலம் சுமார் 4 ஆயிரம் கோடி வெளிநாட்டு வருவாய் தரும் வாய்ப்புகள் உள்ளது. தமிழகத்தில் தற்போது ஒப்பந்தசாகுபடியில் மூலிகை மற்றும் வாசனை பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இந்த மலைவாழ் மக்கள் வாழை, தென்னை போன்றவற்றை சாகுபடி செய்கின்றனர். இப்பயிர்களுடன் ஊடுபயிராக மூலிகை மற்றும் வாசனை பயிர்களை சாகுபடி செய்யும் பொழுது விவசாயிகளுக்கு அதிக மகசூலும், கூடுதல் வருவாயும் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. மலைவாழ் மக்கள் கூட்டுறவு சம்மேளனம் அமைப்பு, வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மலைவாழ் மக்களின் பொருட்களை சந்தைப்படுத்த டிரைவ்ட் இன்டியா என்ற சந்தைசங்கிலி மையம் வரும் ஜனவரியில் கோவையில் ஏற்படுத்த உள்ளது. இவ்வாறு சுப்பையன் பேசினார்.

பெங்களூர் டிரைபெடு துணை பொதுமேலாளர் ராமநாதன் பேசுகையில்," மத்திய அரசின் டிரைட் இன்டியா அமைப்பின் மூலம் பழங்குடி, மலைவாழ் மக்கள் தயாரிக்கும் 12 வகையான பொருட்களை உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக டிரைபெடு அமைப்பிற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது," என்றார்.

பயிற்சி தொடர்பு அலுவலர் சிவா, அவினாசிலிங்கம் ஜேஎஸ்எஸ் இயக்குநர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினார். மூலிகை மற்றும் வாசனை பயிர்கள் துறை தலைவர்

விஜயக்குமார் நன்றி கூறினார். மலைவாழ் மக்களுக்கான இப்பயிற்சி வரும் 25ம் தேதி வரை நடக்கிறது.

## அரசு அறிவிப்பு ஏமாற்றம் கரும்புக்கு கூடுதல் விலை விவசாயிகள் கோரிக்கை

திருச்சி, : கரும்பு டன் னுக்கு கூடுதல் விலை நிர் ணயிக்க வேண்டும் என குறைதீர்நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் விவசா யிகள் குறைதீர்நாள் கூட் டம் கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நேற்று நடந் தது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட தலைவர் (மார்க்சிஸ்ட்) மாசிலாமணி பேசுகையில், இந்த ஆண்டு காவிரியில் தண்ணீர் இல்லை. மழை பொய்த்து விட்டது. கடுமையான மின்வெட்டு வேறு. இத னால் விவசாயிகள் அவ திப்படுகின்றனர். டன் கரும்புக்கு ரூ.3,500 கிடைக்க அரசுக்கு பரிந் துரைக்க வேண்டும் என் றார்.
பாரதீய கிசான் சங்கம் மாநில துணைத்தலைவர் அய்யாக்கண்ணு பேசுகை யில், தமிழக அரசு கடந்த ஆண்டே டன் கரும்புக்கு ரூ.2,500 தருவதாக கூறியது. தற்போது ரூ.2,350 தருவது பயனில்லை. கடனால் சாகும் விவசாயிகளை காப் பாற்றாத மத்திய, மாநில அரசுகளை கண்டிப்ப துடன், டன் கரும்புக்கு ரூ.5,000 கிடைக்க உதவ வேண்டும் என்றார்.
தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலா ளர் (இந்திய கம்யூனிஸ்ட்) அயிலை சிவ.சூரியன், தமிழ்நாடு விவசாயிகள் சங் கம் மாநில துணை தலைவர் (காங்கிரஸ்) புலியூர் நாக ராஜன், தமிழக ஏறி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயி கள் சங்கம் மாநி லத் தலை வர் விசுவநாதன், அய்யன் வாய்க்கால் பாசன தாரர் சங்க திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வீர சேகரன் ஆகியோர் கரும்பு விலையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவித்தனர். கலெக்டர் ஜெயஸ்ரீ பதில ளிக்கையில், தமிழக அரசு அறிவிப்பில் மாவட்ட நிர்வாகம் தலை யிட முடியாது. விவசாயிகள் கோரிக் கை தமிழக அரசு கவ னத்திற்கு கொண்டு செல் லப்படும் என்றார்.

## சம்பா பருவ பயிர் காப்பீட்டில் டிச. 15வரை சேரலாம்

திருச்சி, : வேளாண் பயிர் காப்பீட்டு திட்ட மண்டல மேலாளர் பாரதி வஜ்ஜிரவேலு தெரிவித்துள்ளதாவது:
சம்பா நெற்பயிருக்கு தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் ஏக்கருக்கு மொத்த மதிப் பாக ரூ.8,692 நிர்ணயிக்கப்படும். இதற்கு பிரிமீயமாக பயிர்கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமீ யம் ஏக்கருக்கு ரூ.78 ஆகும்.ஏனைய விவசாயி கள் ரூ.87 பிரிமீயம் செலுத்த வேண்டும். பயிர்கடன் பெறாத விவசாயி கள் பிரிமீயத்தை செலுத்த சிட்டா, அடங் கல்

அல் லது விஏஓ சான்று பெற்று முன் மொழிவு படிவத்துடன் அவரவர் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் தொகையை டிச.15 வரை செலுத்தலாம்.இதற்கு கடன்பெறாத சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமீ யம் ஏக்கருக்கு ரூ. 465 ஆகும். முன் மொழிவு படிவங்களை வேளாண் துறை, கூட்டுறவு மற்றும் வர்த்தக வங்கியில் பெறலாம்.

## திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடி இலக்கு **1.60** லட்சம் ஏக்கர் கலெக்டர் தகவல்

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் 1.60 லட்சம் ஏக்கர் சம்பா சாகுபடி எதிர்பார்க்கப்படுவதாக கலெக்டர் ஜெயஸ்ரீ தகவல் தெரிவித்தார்.

திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் கலெக்டர் ஜெயஸ்ரீ பேசியது: திருச்சி மாவட்டத்தில் 5,625 எக்டேரில் குறுவைநெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 4,112 எக்டேர் அறுவடை நிறைவடைந்துள்ளது. சம்பா சாகுபடி சுமார் 64,000 எக்டேர் (1.60 லட்சம் ஏக்கர்) எதிர்பார்க்கப்படுகிறது. நெல் சாகுபடியில் இரட்டிப்பு மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை ஊக்குவிக்க தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் எக்டருக்கு ரூ.3 ஆயிரம் மதிப்பீட்டில் இடுபொருட்கள் மானியமாக வழங்கப்பட உள்ளது. ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விநியோக்கப்படும். சான்று பெற்ற நெல் விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.5வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

தொடர்ந்து, சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்ட பயனாளிகள் 28 பேருக்கு ரூ.24.49 லட்சத்திற்கான மானியத்தொகை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில், டிஆர்ஓ தியாகராஜன், வேளாண்மை இணை இயக்குனர் சேகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) பாண்டியராஜன், தோட்டக்கலை துணை இயக்குனர் லட்சுமணன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் தியாகராஜன், மின்சார மேற்பார்வை பொறியாளர் முத்தமிழ்செல்வன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

10 ஆண்டுகளுக்கு மணல் அள்ள தடை

காவிரி நீர்பாசன விவசாயிகள் நலசங்க தலைவர் கனகசபை பேசுகையில், காவிரி வறண்டதுபோல், மணலும் இல்லாமல் போய் விடுமோ என்ற கவலை அதிகரித்து வருவதால் மணல் அள்ள 10 ஆண்டுகளுக்காவது தடை விதிக்க வேண்டும் என்றார்.

## கே.எஸ்.லஷ்மி அக்ரி கிளினிக் வேளாண் விரிவாக்க மையம் புதிய கிளை திறப்பு விழா

திருச்சி, : திருச்சி கே.கே.நகர் எல்ஐசி காலனியில் கே.எஸ்.லஷ்மி அக்ரி கிளினிக் வேளாண் விரிவாக்க மையம் புதிய கிளை திறப்புவிழா மற்றும் சோலார் அல்ட்ரா பவர்ஸ் அறிமுக விழா

நடைபெற்றது.

வேளாண் இணை இயக்குளர் அக்ரி டாக்டர் சேகர் புதிய கிளையினை திறந்து வைத்து குத்து விளக்கேற்றி வைத்தார். தமிழ்நாடு விநியோகஸ்தர், டெல்லி லேன்கோ சோலார் பிரை வேட் கம்பெனி வெங்கடாசலபதி சோலார் அல்ட்ரா பவர்ஸின் முதல் விற்ப னையை துவக்கி வைக்க தென்னக ரயில்வே நாக ராஜ் பெற்று கொண்டார். விழாவில் வேளாண் துணை இயக்குனர் பாண்டியராஜன், வேளாண் உதவி இயக்குனர் ஜெய ராஜ், வேளாண் உதவி இயக்குனர் ரவி, வேளாண் உதவி இயக்குனர் (மண்ணச்சநல்லூர்)ஜெயபால், வேளாண் உதவி இயக்குனர் (மணிகண்டம்) ராஜேஸ்வரன், வேளாண் அலுவலர்கள் சாக்ரடீஸ், மல்லிகா, தோட்டக்கலை உதவி இயக்குனர்கள்கிருஷ்ணமூர்த்தி, சுப்பையா, கரூர் வைஸ்யா வங்கி கே.கே.நகர் கிளை மேலா ளர் முரளிதரன், சித்ரா சுரேஷ்குமார், எஸ்.பி. சலூன் செல்வராஜ், பொன்னி, ரஜினி, நித்யானந்தம் ஆகி யோர் கலந்து கொண் டனர். ஏற்பாடு களை அக்ரி டாக்டர் சுரேஷ்குமார், அக்ரி கிளி னிக் மற் றும் மதுரை அக்ரி பிசினஸ் பயிற்சி மையத்தினர்(வாப்ஸ்) செய்திருந்தனர்.

## விவசாயத்திற்கு திறக்கப்பட்ட தண்ணீர் வீணாகிறது புல் வெளியாக மாறிய நெல்லை கால்வாய் சாகுபடி பணிகள் மந்தம்

பட்டு விளை நிலங்கள் விற்பனை நிலமாக மாறி யது. இந்நிலையில் கடந்த 10 நாட்களுக்கு முன் வங்க கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரண மாக மழை பெய்தது. இத னால் அணைகளில் நீர் மட்டம் சற்று உயர்ந்தது. இதைதொடர்ந்து கடந்த வாரம் விவசாய பணிகளுக்கு பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

தாமிரபரணி சுத்தமல்லி அணைகட்டு பகுதியிலிருந்து விவசாய பணிகளுக்காக நெல்லை கால்வாய்க்கு தண்ணீர் திருப்பி விடப்படுகிறது. நெல்லை கால்வாய் மூலம் 4300 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன. நெல்லை கால்வாய் மூலம் வரும் தண்ணீர் முதலில் நயினார்குளத்தில் நிரப்பப்படும். இதன் பின்னர் சேந்திமங்களம், வண்ணான்பச்சேரி, ராஜவல்லிபுரம், பாலாமடை, கல்குறிச்சி, குப்பகுறிச்சி, கட் டளை, உதயநேரி, மூனாம் பொலி, அலங்காரபேரி உள்பட 23 குளங்களில் தண்ணீர் தேக்கப்பட்டு விவசாய பணிகள் மேற்கொள்ளப்படும்.

தற்போது பருவமழை பொய்த்து போனதால் புயல் சீற்றத்தால் கடந்த 10 நாட்களுக்கு முன் மழை பெய்துள்ளது. இதனடிப்படையில் பாபநாசம் அணை விவசாய பணிகளுக்கு திறக்கப்பட்டது. இதனால் நெல்லை கால்வாயிலும் தண்ணீர் வரத்துவங்கி உள் ளது. கால்வாய் முழுவதும் புல், புதர் மண்டி, ஆகாயதாமரை, வேலி காத்தான் செடிகளால் நிரம்பி வழிகிறது.

இதனால் அணையிலிருந்து விவசாய பணிகளுக்காக திறக்கப்பட்ட தண்ணீர் கடைமடை வரை சென்று சேர்வதில் சிக்கல் நீடித்து வருகிறது. நெல்லை கால்வாயின் பல பகுதிகளில் மடைகள் சேதமடைந்து விவசாய நிலங்களுக்கு தண்ணீர் செல்ல முடியாத நிலையில் புதர் மண்டி

காணப்படுகின்றன.

தற்போது அணையில் திறக்கப்பட்ட தண்ணீர் விவசாய பணிகளுக்கு முழுமையாக பயன்படுத்த முடியாது. ஏனெனில் அணைகளில் நீர் மட்டம் குறைவாக உள்ளதே இதற்கு காரணம். இதனால் விவ சாய பணிகளை துவக்க விவசாயிகள் தயக்கம் காட்டிவருகின்றனர். ஒரு சிலர் மட்டுமே மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவ சாய பணிகளில் துவக்கி உள்ளனர்.

இதுகுறித்து நெல்லை கால்வாய் பாசன விவசாயி சக்தி வேல் கூறுகையில்; நெல்லை கால்வாய் பாசனத்தில் பல ஆண்டுகளுக்கு முன் முப்போகம் விளைந்தது. பின்னர் இரு போகமாக மாறியது. தற் போது பருவ மழை பொய்த்து போனதாலும், கால்வாய் பராமரிக்காததா லும் ஒரு போகம் விளைவதே குதிரை கொம்பாக உள்ளது. 20 ஆண்டுகளாக நெல்லை கால்வாய் பகுதியில் சிமென்ட் தளம் அமைக்க கோரிக்கை விடுத்தும் பயன்இல்லை.

தற்போது நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தால் மட்டுமே விவசாய பணிக்கு திறக்கப்பட்ட தண்ணீர் தொடர்ந்து 134 நாட்களுக்கு வழங்க முடியும். நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை எனில் பயிர்கள் பாதிக்கும். இதனை தவிர்க்க குறைந்த அளவு நீரினை கொண்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் சோளம், கம்பு, மக்காசோளம், உளுந்து உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்ய வேளாண்துறை அதிகாரிகள் விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கலாம் என்றார்.

<u>அரசின் அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது கரும்பு டன்னுக்கு ரூ.3 ஆயிரம் விலை நிர்ணயிக்க வேண்டும்</u>

திருப்பூர், : இது தொடர்பாக கொங்குநாடு முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் ஈஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை.

தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் தேர்தல் பிரசாரத்தின் போது தனது தலைமையில் ஆட்சி வந்தால் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ2,500 என நிர்ணயம் செய்யப்ப டும் என அறிவித்தார்.

ஆட்சிக்கு வந்த அவர், இரு ஆண்டுகளுக்கு பின்னர் அன்று கொடுத்த வாக்குறுதியின்படி ரூ.2,500 கூட தற்போது அறிவிக்காதது ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த 2 ஆண்டுகளில் டீசல் விலை, மின் கட்டணம், ஆட்களின் கூலி, பஸ் கட்டணம், பால்விலை என அனைத்தும் உயர்ந்து விட்டது.

இத்தகைய நிலையில், ரூ.2,350 என நிர்ணயம் செய்துள்ளது விவசாயிகளுக்கு எப்படி கட்டுபடியாகும். ஆகவே கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஓரளவாவது காப்பாற்றும்

வகையில் டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரமாக உயர்த்த வேண்டும்.

அதேபோல் மஞ்சள் விலையும் கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ரூ.16 ஆயிரமாக விலைபோன மஞ்சள் தற்போது வெறும் ரூ.5 ஆயிரத்துக்கு குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆகவே மஞ்சளை அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விவசாயிகள் வாங்கிய கடனுக்கான ஜப்தி நடவடிக்கை தவிர்க்க வேண்டும் வங்கியாளர்களுக்கு கலெக்டர் வேண்டுகோள்

திருப்பூர், : விவசாயிகள வாங்கிய கடனுக்கான ஜப்தி நடவடிக்கையை முடிந்தவரை தவிர்க்க வேண்டும் என வங்கியாளர்களுக்கு கலெக்டர் வேண்டுகோள் விடுத்தார்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட் டம் நேற்று நடந்தது. மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி, வேளாண் இணை இயக்குநர் முகமது கலிமுல்லா ஷெரீப், துணை இயக்குனர் சந்தானகிருஷ்ணன், கூட்டுறவு சங்கஙகளின மண்டல இணைப்பதிவாளர் பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விவசாயிகள் கோரிக்கை விவரம்: பொங்கலூர் விற்பனைக்கூடத்தில் வாரம் ஒரு நாள மட்டுமே கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. இங்கு வாரத்திற்கு 4 நாட்கள் கொப்பரை கொள்முதல் செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டும்.

தேங்காய் மூலம் தயாரிக்கப்படும மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. இதனால், உள்நாட்டில் தேங்காய விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில, ஏற்றுமதி தடையை மத்திய அரசு திருமபபெறவேண்டும்.

சொட்டு நீர் பாசனத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ.5 கோடி மானியத்தில் இதுவ ரை ரூ.2 கோடி மட்டுமே பயன்படுத்தப்படடிருப்பதாக வேளாண்துறை தெரிவித்துளளது. இந்த திட்டத்தில் மானியத்தை பெற, இப்போது கடுமையான விதிகள் உள்ளது. இந்த விதிகளை தளர்த்த வே ண்டும். விவசாயிகள் வாங் கிய கடனுக்காக, ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவதை வங்கிகள் கைவிட வேண்டும்.

கரும்புக்கு இப்போது அறிவிக்கப்பட்டுள்ள விலை உயர்வு மூலம், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை வேண்டுமானால் சிறிது குறைக்கலாம். முழுமையாக குறைய வாய்ப்பில்லை. இதனால் இப்போது சாகுபடி செலவு, வெட்டுக்கூலி ஆகியவற்றை கணக்கில் கொண்டு டன்னுக்கு ரூ.4,000

வழங்கவேண்டும்.

அமராவதி அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத நிலையில், இந்த பாசன விவசாயிகள் தண்ணீர் திறக்கப்பட்டு 20 நாட்களுக்கு பிறகும் நெல் சாகுபடி பணிகளை தொடங்க தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இப்போதுளள தண்ணீர் இருப்பை ஆய்வு செய்து, புஞ்சை பாசனத்துக்காவது தடையில்லாமல் தண்ணீர் விட ஏற்பாடு செய்யவேண்டும்.

தாராபுரம் அருகே சின்னக்கரை ஓடையில் தடுப்பணை கட்டும் பணி, கரை அருகில் உள்ள காறறாலைகளால் பாதிக்கப்பட்டுள் ளது. ஓடைகளின் அருகே உள்ள காற்றாலைக ளை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும்.

அலஙகியம் பாலத்தில் மலைத்தேன் கூடுகள் அதிக எண்ணிக்கையில் உள்ளது. தேன் குடிக்க வரும் கழுகுகள் கூட்டை கலைத்து விடுவதால், தேன் ஈக்கள் கடித்து மக்கள் பாதிக்கப்படுகின்றனர். சமீபத்தில் தேன் ஈ கடித்து இப்பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்தார். போக்குவரத்து நிறைந்துள்ள இப்பகுதியில் உளள தேன்கூடுகளை அகற்ற நடவ டிக்கையெடுக்கவேண்டும்.

பிஏபி பாசன பகுதியில தண்ணீர் திறந்துவிடும் முன்பு பாசன சங்க பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிக்க வே ண்டும். இதற்கு விவசாயம் சார்ந்த அனைத்து துறை அதிகாரிகள் கொண்ட குழு அமைக்க வேண்டும். இதன் மூலம், விவசாயிகள் தடையில்லாமல் சாகுபடி பணிகளை மேற்கொளள முடியும்.

உரங்கள் ஒவ்வொரு கடையிலும், ஒவ்வொரு விலையில் விற்கப்படுகின்றன. பல்லடம் அருளபுரம் பகுதியில சாய ஆலையில் இருந்து வெளியேறும கழிவால் விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. கம்ப்யூட்டர் சிட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமத்தை போக்க வேண்டும்.

அதிகாலையில் மின்சாரம் நிறுத்தப்படுவதால், உழவர் சந்தைகளில் விற்பனை பாதிக்கப்படுகிறது. உழவர் சந்தை பகுதிகளில் காலை 4 மணியிலிருந்து 6 மணிவரை மின்சாரம் தடையில்லாமல் வழங்கவேண்டும். கடும் மின்வெட்டால் மாற்று மின் சக்தியான சோலார் மின்விளக்கு பயன்பாடு குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்' என்றனர்.

பதில் அளித்து கலெக்டர் பேசுகையில், விவசாயிகள் வாங்கிய கடனுக்காக, ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவதை வங்கிகள் முடிந்தவரை தவிர்க்கவேண்டும். சம்பந்தப்பட்ட விவசாயியை அழைத்து பேசி கடனை திரும்ப பெறும் முயற்சியில் வங்கிகள் ஈடுபடவேண்டும். இந்த கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து வாங்கும் மனுக்கள் மீது, அடுத்த கூட்டத்திற்கு முன்பு சம்பந்தப்படட விவசாயிக்கு அதிகாரிகள் பதில் அளிக்க வேண்டும். கல்விக்கடன் நிராகரிக்கப்பட்டால, விண்ணப்பதாரருக்கு அதற்குரிய காரணத்தை வங்கிகள் தெரிவிக்கவேண்டும் என்றார்.

## கரும்பு விவசாயிகளை ஏமாற்றுகிறது அரசு தமிழக விவசாயிகள் சங்கம் குமுறல்

\ தாராபுரம், : தமிழக அரசு கரும்பு விவசாயிகளைதொடர்ந்து ஏமா ற்றி வருவதாக தமிழக விவசாயிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அலங்கியம் பழனிச்சாமி கூறியதாவது:தமிழக அரசு கரும்பு விவசாயிகளுக்கு, எதிர்பார்த்த அளவு விலை நிர்ணயம் செய்துவிட்டதாகஅறிவித்துள்ளது. இது உண்மையல்ல.மாநில அரசுக்கு கரும்பு விவசாயிகள் மீது அக்கறை இருந்திருந்தால் விவசாயிகள் கோரிக்கையின்படி விலை நிர்ணயம் செய்திருக்க வேண்டும்.

மத்திய அரசின் ஆதார விலை அறிவிக்கப்பட்டவுடன்,மாநில அரசின் பரிந்துரை விலை எவ்வளவு சேர்க்கப்பட்டுள்ளது

என்பதை தெளிவாக கூட்டி அறிவித்திருக்க வேண்டும்.ஆனால், முதலமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசின் ஆதார விலையான மெட்ரிக் டன்னுக்கு ரூ.2,350 என்பதில், ஒரு ரூபா யைகூட கூட் டாமல் அதையே அப் படியே நிர்ணய விலையாக அறிவித்து விவசாயிக ள ஏமாற்றுகிறார்.

இது எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

உரம் விலை உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை, அதிமுக ஆட்சியில் ஏற்பட்டுள்ள கடுமையான மின் வெட்டு, டீசல் விலை உயர்வு என்று பல்வேறு சிரமங்களை தாண்டி, கடன்பட்டு, போராடி கரும்பு விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில அரசு கரும்பு விவசாயிகளுக்கு என்ன செய்துள்ளது உரிய நிர்ணய விலையை தராமல் ஏமாற்றி வருகிறது.

தற்போது அறிவிக்கப்பட்ட நிர்ணய விலையில் வெட்டுக்கூலி, வாகனச் செலவு உள்ளிட்டவை போக, விவசாயிக்கு ஒரு டன்னுக்கு 1,800 ரூபாய் மட்டுமே கிடைக்கும்.

ஏக்கருக்கு 60 ஆயி ரம் ரூபாய் வரையில் முதலீடு செய்து கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிக்கு இந்த நிர்ணய விலயில் எதுவும் மிஞ்சாது என்பது அரசுக்கு தெரியும்.

அப்படி இருந்தும் உரிய விலையை நிர்ணயம் செய்யாதது கவலையளிக்கிறது. வெட்டுக் கூலி, வாகனசெலவுகளை உள்ளடக்கி கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என ஏற்கனவே முதல் வருக்கு தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளாம். கரும்பு விவசாயிகளின் நலன் கருதி தமிழக அரசு பொங்கல் பண்டிகை முன்பு எங்கள் கோரி க்கையை நிறைவேற்றித்தர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என்று கூறினார்.

**வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால் பிசான பயிர் சாகுபடி கேள்விக்குறி தூத்துக்குடி விவசாயிகள் 'கலக்கம்'**

தூத்துக்குடி, : வடகிழக்கு பருவமழை பொய்த்துப்போனதால் தூத்துக்குடி மாவட்டத்தில் பிசான பயிர் சாகுபடி கேள்விக்குறியாகியுள்ளதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் விவசாயத்தை முக்கியத்தொழிலாக கொண்டுள்ளது. தாமிரபரணி நதியை நம்பி யே தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் மருதூர், ஸ்ரீவை என இரு அணைகளின் மூலமே பாசனத்திற்கான தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மருதூர் அணையின் மேலக் கால் மூலமாக 20 ஆயிரத்து 547ஏக்கர் விவசாய நிலம் பாசனவசதி பெற்று வருகின்றது.

வடகால் வாய்க்கால் மூலமாக 12ஆயிரத்து 760 ஏக்கரும், தென்கால் வாய்க் கால் மூலமாக 12 ஆயிரத்து 800 ஏக்கரும் என சுமார் 25 ஆயிரத்து 560 ஏக்கர் விவ சாய நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. மாவட்டத்தில் வாழைக்கு அடுத்தபடியாக அதிக அளவில் நெற் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் மொத்தமுள்ள 46ஆயிரத்து 107ஏக்கர் விவசாய நிலங் களை நம்பி பல ஆயிரக்கணக்கான விவசாயிகள், லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து முடித்துள்ள நிலையில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பிசான பயிர் சாகுபடி பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. நெல்லை,

தூத்துக்குடி மாவட்டத்தில் போதிய மழை இல்லாத காரணத்தினால் அணைகள் நிரம்பாததுடன், மாவட்டத்திலுள்ள குளம், குட்டைகளிலும் போதுமான தண் ணீர் இல்லை. இதனால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பிசான நெல் பயிர் சாகுபடியை துவங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பாபநாசம் அணையில் தற்போதைய நிலவரப்படி 71.70அடி தண்ணீரே உள் ளது. இந்த தண்ணீர் நெல் லை, தூத்துக்குடி மாவட்ட விவசாயத்திற்கு போதுமானதல்ல என்பதால் விவசாயி கள் நெல்சாகுபடி பணிகளை துவங்காமல் உள்ளனர். இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு நெல்லை, தூத்துக்குடி மாவட்ட பிசான பயிர் சாகுபடிக்காக தாமிரபரணி ஆற்றில் இருந்து 137நாட்களுக்கு தண் ணீரை திறந்துவிட அரசு அனுமதி அளித்துள் ளது. இதற்கேற்ப நாள் தோறும் 600 கனஅடி முதல் 900 கனஅடி வரை தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதை நம்பி நெல் பயிர் நடவு பணிகளை செய்தா லும் நெற்பயிர்கள் வளர்ந்து வரும் நேரத்தில் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

தூத்துக்குடி மாவட்டத் தில் இன்னும் விவசாயப்பணிகள் துவங்கவில்லை. வசவப்பபுரம், கருங்குளம், ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட சிலபகுதிகளில் போடப்பட்ட நெல்நாற்றங்கால்களும் நாற்றுகள் முற்றி கருகி போய்விட்டன. ஏற்கனவே மின்வெட் டால் அனைத்துதொழில்களும் பாதிக்கப் பட்டு வரும் நிலையில் வடகிழக்கு பருவமழையும் பொய்துப்போய் விவசாய பணிகள் துவங்கப்படாமல் இருப்பது விவசாயிகளை மட்டுமல்ல லட்சக்கணக்கான விவசாய தொழி லாளர் களின் வருமானத்தை முடக்கி வறுமையில் தள்ளியுள்ளது. எது எப்படியே விவசாயப்பணிகளை வரும் நாட்களிலாவது துவங்கிட வருணபகவான் கருணை காட்டினால் சரிதான்.

அரசுக்கு பொய்யான தகவல் தரும் அதிகாரிகள்

நெல்லை மாவட்டத்தில் மட்டும் தாமிரபரணி பாசனப்பகுதிகளில் தற்போது சில பகுதிகளில் நெல்பயிர் சாகுபடி பணிகள் துவங்கியுள்ளது. அதுவும் மாவட்டத்தின் கடைக்கோடி பகுதிகளில்

விவசாயப்பணிகள் துவங்கப்படவில்லை. அணையில் இருக்கும் தண்ணீர் நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்களுக்கு போதுமானதல்ல என்பது பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கு நன்கு தெரிந்திருந்தபோதும் தாங்கள் தப்புவதற்காக அரசுக்கு பொய்யான தகவல்களை கொடுக்கின்றனர்.

இதனாலேயே அரசு பிசானபயிர் சாகுபடிக்கு அனுமதி கொடுத்து தண்ணீரையும் திறந்துவிட்டு விவசாயப்பணிகளை மேற்கொள்ளுமாறு விவசாயிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கிறது. அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் கடைக்கோடிக்கு வரும்முன் தொழிற்சாலைகள், குளிர்பானம், மினரல் வாட்டர் நிறுவனங்களுக்காக பெரும்பாலான பங்கு தண்ணீர் திருடப்படுகிறது என்பதெல்லாம் அதிகாரிகளுக்கு தெரியும். இதனையெல்லாம் தடுக்க முன்வராத அதிகாரிகளால் பாதிக்கப்படுவது நாங்கள்தான் என்று விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.